# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 29/2023

## வழக்கு சாட்சி :PW1(LW1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிரோசா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | வீரசேகர் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | கோனார்குறிச்சிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 27th day of June 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது கோனார் குறிச்சிப்பட்டியில் குடியிருந்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். கடந்த 07.10.2021 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் நானும், எனது குழந்தைகளும் எனது வீட்டில் இருந்த போது எனது பக்கத்து வீட்டை சேர்ந்த ஆஜர் எதிரி சக்திவேல் என்பவர் எனது வீட்டிற்கு வந்து என்னை பார்த்து " உன் வீட்டுக்காரர் ஊரில் இருக்கிறார், என்னை வைத்துக்கோ " என்று கேட்டார். நான் அதற்கு அந்த மாதிரி பெண் நான் கிடையாது என்று கூறினேன். அவர் நீ என்ன பத்தினியா என்று கேட்டார். நான் அணிந்திருநதஎனது சேலையை பிடித்து இழுத்தார். நான் தப்பிக்க முயற்சி செய்யும் போது அருகில் இருந்த கட்டையை எடுத்து தலை, கை, காலிலும் அடித்தார். தலையில் உள்காயமும், கையில் இரத்த காயமும் ஏற்பட்டது. ஆஜர் சக்திவேலின் தம்பி எதிரி பாஸ்கர் என்பவர் வந்துஎன்னை பார்த்து என்னடி தேவுடியா என்று பேசி செருப்பால் கன்னத்திலும், தலையிலும் அடித்தார்.

2. ஆஜர் எதிரி ராமநாதன் என்பவர் என்னை கன்னத்தில் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். ஆஜர் எதிரி கவிதா என்பவர் தேவுடியா விடாத என்று அசிங்கமாக பேசினார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அனைவரும் வந்தவுடன் எதிரிகள் அங்கிருந்து சென்று விட்டார்கள். நான் எனது நாத்தனார் நாகவேணி என்பவருக்கு போனில் இது குறித்து தகவல் சொன்னேன் . பிறகு நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். எனது நாத்தனார் நாகவேணி 108 ஆம்புலன்ஸ்சை வரவழைத்து புதுக்கோட்டை மருததுவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அன்று போலிசார் இது குறித்து விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கட்டையை விட பெரிய

கட்டையால் தான் 1 வது எதிரி என்னை அடித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

1. எதிரி சக்திவேல் குடும்பத்திற்கும்,எனது குடும்பத்திற்கும் வயலில் மாடு மேய்ப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எதிராக உள்ள தரிசு நிலத்தில் எதிரி சக்திவேலின் மாடு மேயும் போது அதனை விரட்டியதால் அதன் பின்னிட்டு தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகள் தாக்கியதாகவும், அதற்கு பின்னிட்டு எனது நாத்தனார் நாகவேணிக்கு நான் போன் மூலம் தகவல் சொல்லிய பிறகு மயக்கம் போட்டு விழுந்தது விட்டேன் என்ற விவரத்தை எனது புகாரில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை அடித்தது சம்மந்தமாக நானோ, எனது உறவினர்களோ காவல் நிலையம் சென்று எழுத்துப்பூர்வமான புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.

2. புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் மருத்துவமனையில் போலிசார் எழுதினார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எந்த தேதியில் நான் கையெழுத்து செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை நாள், எத்தனை மணி நேரம் நான் மயக்கத்தில் இருந்தேன் என்றால் 08.10.2021 ம் தேதி காலை 10.00 மணியளவில் தான் மயக்கம் தெளிந்தது. எனக்கு கன்னத்திலும், தலையிலும் இரத்தம் வந்தததாக சொல்லப்படுவதற்கு பினபு எந்த மருத்துவமனயயில் சேர்ந்தேன் என்றால் நேரடியாக புதுக்கோட்டை மருததுவ கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தேன்.

3. மருத்துவமனையில் மருத்துவர் விசாரிக்கும் போது என்னை எத்தனை பேர் அடித்தார்கள் என்ற விவரத்தையும, அவர்கள் பெயர் விவரத்தையும் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். மருத்துவரிடம் என்னை அடித்ததாக கூறப்படும் 4 நபர்கள் மற்றும் அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரிதான். வழககு சம்பவம் தொடர்பாக நான் மருததுவமனையில் இருநது வந்ததற்கு பின்னிட் டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 23 நாட்கள் இருந்தேன். இந்த வழககு சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 5 முறை விசாரித்தார்கள்.

4. போலிசார் என்னை முதலில் விசாரித்து கையொப்பம் வாங்கியதற்கு பின்னிட்டு என்னிடம் எந்த கையொப்பமும வாங்கிவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக 07.10.2021 அன்று இரவே போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், போலிசார் அதை படித்து காட்டவில்லை என்றாலும் சரிதான். 07.10.2021 ம் தேதி நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்றால் எனது நாத்தனாரான் மகன் விநாயகம் என்பவர் அழைத்து சென்றார்.

5. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எதிரி சக்திவேல் குடும்பத்தினர் புகார் கொடுத்து அந்த வழக்கும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும் போது என்னை எந்த கட்டையால் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் விராலிகட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளேன். எதிரி கவிதா பஞ்சாயத்து தலைவராகவும், எதிரி ராமநாதன் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலராகவும் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான்

சொல்வது போல் எதிரிகள் என்னை ஆபாசமாக பேசவில்லை, அடிக்கவில்லை, இரத்த காயம் எதுவும் ஏற்படவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், எதிரி கவிதா கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் என்னை தாக்கியதாக மிகைப்படுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்து அதற்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி எதிரிகள் வீடு அருகில் இல்லை என்றாலும், வழக்கிற்காக 5 அடி, 10 அடி இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றாலும், ஆடு, மாடுகள் மேய்த்ததால் அவர்களை நான் ஆபாசமாக பேசி, தாக்கிவிட்டு அதில் இருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.